# 8 எமது சமய நூல்கள்

சைவ சமய உண்மைகளை வடமொழியிலும், தமிழ்மொழியிலும் உள்ள பல்வேறு நூல்கள் சிறப்பாக விளக்குகின்றன. அவற்றுள் வடமொழியில் வேதங்களும் ஆகமங்களும், உபாகமங்களும் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. அன்றியும் புராணங்கள், இதிகாசங்கள் என்னும் பழைமையான நூல்களிலும் சைவ சமய உண்மைகள் கதை வடிவில் இடம்பெற்றுள்ளன. தமிழ்மொழியில் பன்னிரு திருமுறைகளும், தோத்திரங்களும், பிரபந்தங்களும், புராணங்களும், மெய்கண்ட சாஸ்திரங்களும் சிறப்பு பெற்று விளங்குகின்றன. நாம் வடமொழியில் எழுந்த சமய நூல்கள் என்ற வகையில் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் என்பவற்றைப் பற்றி இங்கு கற்போம்.

## அ. வேதம்

சைவ சமய மரபில் வேத, ஆகமங்கள் முக்கியத்துவமுடையன. அவற்றுள் வேதங்களை சைவத்தின் முதல் நூல்கள் என்பர். உயர்ந்த அறிவைக் கூறுவதால் வேதம் எனவும், மறைந்து நிற்கும் பரம் பொருளை விளக்கும் நூல் என்பதால் மறை எனவும், மனிதரால் ஆக்கப்படாதவை என்பதால் **'அபௌருசேயம்'** எனவும், பல காலமாகச் செவி வழியாகக் கேட்கப்பட்டு வந்தமையினால் சுருதி எனவும், எழுதப்படாமல் இருந்தமையினால் **'எழுதாக்கிளவி'** எனவும் அழைக்கப்பட்டன. வேதங்கள், **இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்** என நான்காக வகுக்கப்பட்டுள்ளன. ஆதலால் அவை நால்வேதம், நான்மறை, சதுர்வேதம் எனவும் அழைக்கப்படுகின்றன. அந்நான்கு வேதங்களும் முறையே சதாசிவ மூர்த்தியின் தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய நான்கு திருமுகங்களில் நின்றும் தோன்றின என்றும், அவை இறைவனால் வசிட்டர், வாமதேவர், விசுவாமித்திரர், அத்திரி, பரத்துவாசர் முதலிய முனிவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவை என்றும் நம்பப்படுகின்றது.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும் **சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்** என நான்கு பகுதிகள் உண்டு. அவை முறையே பிரமச்சரியம் (மாணவநிலை), கிருகஸ்தம் (இல்லறநிலை), வானப்பிரஸ்தம் (துறவுக்கு ஆயத்தம் செய்யும் நிலை), சன்னியாசம் (முழுத்துறவுநிலை) என்னும் வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் உள்ளவர்களுக்கு உரியன என்று கொள்ளப்படுகின்றன.

### (1) இருக்கு வேதம்

வேத நூல்களுள் இருக்கு வேதமே முதன்மையானதும், பழமை வாய்ந்ததுமான இலக்கியமாகும். இதிலே 1028 பாசுரங்கள் அடங்கியுள்ளன. இப்பாசுரங்கள் மண், விண், இடைநிலை ஆகிய மூவிடங்களிலும் வெவ்வேறாய்

விளங்கும் இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாக உருவகித்து, அவற்றைத் துதிப்பாடல்கள் மூலம் அழைத்து, அத்தெய்வங்களின் அருளைப் பெறுவதன் மூலம் இம்மைப் பயன்களையும், மறுமைப் பயன்களையும் பெறலாமென நம்பிப் பாடப்பட்டவை ஆகும். இருக்கு வேதப் பாடல்கள் தெய்வங்களை அழைத்தல், துதித்தல், வேண்டல் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளன.

வேதகால மக்கள் பல இயற்கைத் தெய்வங்களை வழிபட்டோராயினும் தெய்வம் ஒன்றே என்றக் கருத்தும் அவர்களிடம் காணப்பட்டுள்ளது. அதற்கு உள்பொருள் (சத்து) ஒன்றே; அதனை அக்கினி என்றும், யமன் என்றும், மாதரிசுவன் என்றும் ஞானிகள் பலவாறு கூறுவர் என்ற இருக்கு வேத மகாவாக்கியம் சான்றாகக் காணப்படுகின்றது.

இருக்கு வேதத்தில் வரும் மந்திரம் ஒன்று ''சாவித்திரி'' என்றும், ''காயத்திரி'' என்றும் புகழ் பெற்று விளங்குகிறது. சாவித்திரு என்னும் பழைய ஞாயிற்றுக் கடவுளை விளித்துப் பாடப்பட்டமையால், இது ''சாவித்திரி மந்திரம்''என்றும் காயத்திரி யாப்பிலே பாடப்பட்டமையால் ''காயத்திரி மந்திரம்'' என்றும் பெயர் பெற்றுள்ளது. இம்மந்திரம் இந்துக்களால் காலை வழிபாட்டிலே பக்தி சிரத்தையோடு ஓதப்பட்டு வருகின்றது. இம்மந்திரம் ஒளிமயமாய் எங்கும் நிறைந்த உள்பொருள் பற்றிய உண்மையையும் அது வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டியதன் இன்றியமையாமையையும் எமக்கு உணர்த்துகின்றது.

## (2) யசுர் வேதம்

இருக்கு வேத வழிபாட்டு முறையை விரித்தும், ஒழுங்குப்படுத்தியும் கூறுவது யசுர் வேதமாகும். இவ்வேதம் செய்யுள் நடையிலும், உரை நடையிலும் அமைந்த வேள்வி மந்திரங்களைக் கொண்டுள்ளன. தெய்வங்களை திருப்திப்படுத்துவதற்காக வேள்வி செய்து வழிபடும் முறையை யசுர் வேதம் குறிப்பிடுகின்றது.

யசுர் வேதமானது, பல்வேறு சங்கிதைகளாகப் பயின்று வந்துள்ளது. இச்சங்கிதைகள் கிருஷ்ண யசுர்வேதம் (கருநிற யசுர்வேதம்), சுக்கில யசுர் வேதம் (வெள்ளை நிற யசுர் வேதம்) என இருவகைப்படும். கிருஷ்ண யசுர் வேதம், வேள்வி மந்திரங்களையும், அவற்றுக்குரிய கிரியை நெறியை அறிவுறுத்தும் விதிகளையும் கூறுகின்றது. சுக்கில யசுர் வேதம் மந்திரங்களோடு கிரியை முறைகள் பற்றிய விரிவான அறிவுறுத்தல்களைப் பிராமணம் எனப்படும் பிற்சேர்க்கையாகத் தருகின்றது.

யசுர் வேதம், தெய்வ வழிபாட்டு முறையிலே புதியதோர் திருப்பத்தைத் தோற்றுவித்துள்ளது. தெய்வத்துக்குப் பல பெயர்களைக் கூறும் இப்புதிய முறையானது, இவ்வேதத்திலேயே முதன்முதலாகக் காணப்படுகின்றது. சுக்கில

யசுர்வேதத்தின் பதினாறாம் அத்தியாயத்தில் உருத்திரனுக்கு நூறு பெயர்கள் கூறி வேண்டுதல் செய்யப்படுகின்றது. உருத்திரனுக்கு இடப்பட்ட பெயர்களில் சங்கரன், சிவகரன், நீலக்கிரீவன், பசுபதி போன்ற பெயர்கள் பிற்காலத்தில் சிவனுக்குரியனவாகக் காணப்படுகின்றது. இது பிற்காலத்தில் உருத்திரனைச் சிவனாக உபசரித்துக் கூறும் மரபிற்கு ஏதுவாகின்றது. அவ்வகையிலே, யசுர் வேதத்தில் உள்ள சதருத்திரியம் சைவர்களுக்கு முக்கியமானது. தென்நாட்டுக் கோயில் பூசையில் இறைவனுக்கு நூற்றெட்டு (108) பெயர் (அஷ்டோத்தரநாமம்) ஆயிரத்தெட்டு (1008) பெயர் (சகஸ்ரநாமம்) சொல்லியும் அருச்சனை செய்யும் வழக்கம் யசுர் வேத்தின் வழிவந்ததெனலாம்.

## (3) சாம வேதம்

உள்ளத்தை உருக்கும் இசைப்பாடல்களை உடையது சாம வேதம். ‘‘சாமம்’’ என்னும் சொல்லின் பொருள் இசை என்பதாகும். தெய்வ வழிபாட்டில் இசை பெறும் முக்கியத்துவத்தை இவ்வேதம் உணர்த்துகின்றது. இறைவன் சாமவேத விருப்பினன் ஆவான். ‘‘வேதானாம் ஸாமவேதோ அஸ்மி’’ என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறுகின்றார். இக்கூற்று சாமவேதத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. சாமவேதம் இசையால் இறைவனை அடையலாம் என்பதை காட்டுகிறது.

## (4) அதர்வ வேதம்

அதர்வர், ஆங்கீரசர் என்ற இரு இருடிகள் பரம்பரையினால் ஆக்கப்பட்டதனால் அதர்வம் என அழைக்கப்படுகின்றது. இவ்வேதம் பிரம்ம வேதம், ஆங்கிரஸ்வேதம், அதர்வணவேதம் எனவும் அழைக்கப்படும். இவ்வேதம் மக்கள் வாழ்வியலில் இடம்பெறும் விடயங்களைக் கொண்டமைந்துள்ளது. அதர்வ வேதமானது, செய்யுள் நடையில் அமைந்தது. இவ்வேதம் மந்திரம், கட்டளை, துதி என்பவற்றைக் கொண்டுள்ளது. பல்வேறு நோக்கங்களுக்கும் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும் மந்திரங்கள் பற்றி அதர்வ வேதம் கூறுகின்றது. நன்மை தரும் மந்திரங்கள் மட்டுமன்றி, தீமை பயக்கும் மந்திரங்களும் அதர்வ வேத்தில் உண்டு. உறவினர்களுக்கு நன்மை தருகின்ற பௌஷ்டிகாணி; பகைவர்களை அழிக்கப் பயன்படும் அபிசாராணி; நோய், பஞ்சம் முதலியவற்றிலிருந்து விடுபடும் பேஷஜானி, வசியம், மாந்திரிகம் போன்றவற்றை விளக்கும் ஸ்திரிகருமாணி முதலான மந்திரங்களைக் காணமுடிகின்றது.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 📖 பாடச் சுருக்கம்

- வேதங்கள் சைவத்தின் முதல் நூல்களாகும்.
- இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன நால்வேதங்களாகும்.
- நான்கு வேதங்கள் சங்கிதை, பிராமணம், ஆரணியம், உபநிடதம் என்னும் உப பிரிவுகளை உடையன.
- வேதப் பாடல்கள் தெய்வங்களை அழைத்தல், துதித்தல், வேண்டல் என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளன.

## ✍ பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதுக.**

1. சைவ சமய உண்மைகளைக் கூறும் வடமொழி நூல்கள் சிலவற்றை குறிப்பிடுக.
2. வேதங்களுக்கு வழங்கப்படும் மறுபெயர்களைத் தருக.
3. யசுர் வேதத்தின் இரு பிரிவுகளையும் எழுதுக.
4. ''சாமம்'' என்பதன் பொருளைக் குறிப்பிடுக.
5. வேத கால வழிபாடு பற்றி நீங்கள் அறிந்த விடயங்களை எழுதுங்கள்.

## ॐ செயற்பாடு

''வேதகால இறைவழிபாடு'' என்ற தலைப்பில் வகுப்பறையில் ஐந்து நிமிடமளவில் பேச்சொன்றை நிகழ்த்துக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## (ஆ) ஆகமம்

வேதமும், ஆகமமும் இறை உண்மையை எடுத்துக் கூறும் நூல்களாகும். வேதங்களில் பொதுவான சமயக் கொள்கைகள் கூறப்பட்டாலும், ஆகமங்களில் வழிபாடுகளும், கிரியைகளும் சிறப்பாகவும், விரிவாகவும் கூறப்படுகின்றன. அதனால், வேதம் பொதுநூல் எனவும், ஆகமம் சிறப்பு நூல் எனவும் கொள்ளப்படுகின்றன. ஆகமங்கள் சைவ சமயத்தை சிறப்பாகக் கூறுவதனால் சிவாகமங்கள் என அழைக்கப்படும். இச்சிவாகமங்கள் தவிர விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைஷ்ணவ ஆகமங்கள் சங்கிதை என்றும் தந்திரம் என்றும் பஞ்சராத்திரம் என்றும் அழைக்கப்படும். பெரும்பாலும் இவ்வாகமங்கள் பஞ்சராத்திரம் என்றே அழைக்கப்படும். இவற்றின் தொகை 108 வகைப்படும்.

ஆகமம் என்ற சொல்லின் பொருள் தொன்று தொட்டு வரும் அறிவு எனவும் இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞான நூல் எனவும் பொருள் கூறுவர். ஆகமம் என்னும் சொல்லை ஆ+ க + ம எனப்பிரித்து ஆ - சிவஞானம் என்றும், க - மோட்சதானம் என்றும், ம - மல நாசம் என்றும் பொருள் கொண்டு, ஆகமம் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் செய்து ஞானத்தை உதிப்பித்து மோட்சம் கொடுப்பதற்காக உபதேசிக்கப்பட்ட நூல் எனவும், ஆ + க + ம எனப்பிரித்து ஆ - பசு, க - பதி, ம - பாசம் எனப் பொருள் கொண்டு ஆகமம் பதி, பசு, பாச இலக்கணங்களை விரித்துக் கூறும் நூல் எனவும் பெரியோர் கூறுவர்.

சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். அவை காமியம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம் விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கிநேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பனவாகும்.

சிவாகமங்கள் மிகத்தொன்றுதொட்டு வழங்கிவரும் சிவவழிபாட்டு முறைகளை விளக்கி கூறுவதனாலும், சைவத்தின் பிரமாண நூல்களாகவும் சிறப்பு நூல்களாகவும் கொள்ளப்படுகின்றன. இவை கடவுள் வழிபாட்டை ஆலயம், மூர்த்தி, மந்திரம், இரகசியம் ஆகிய முறைகளில் விரித்துக் கூறும்.

சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்னும் நான்குப் பிரிவுகளை உடையன. ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றை அடைய செய்வதே சிவாகமங்களின் குறிக்கோளாகும். இவ்வகையில் கோயிற் கிரியைகளின் வகைகள், அவற்றைச்

செய்யும் முறை வழிபடுவோருக்குரிய இயல்புகள், சைவ சாதனங்கள், கடவுள் வழிபாட்டினால் ஆன்மாக்கள் அடையும் பேறுகள் ஆகியவற்றுடன் ஆலய, வழிபாட்டோடு தொடர்புடைய ஆலயம் அமைத்தற்கான இடம், ஆலய அமைப்பு முறை, படிம இலக்கணம், படிமங்களை வார்க்கும் முறை, தெய்வங்களுக்குரிய வாகனங்கள் அமைக்கும் முறை, தேர் அமைக்கும் முறை, அருச்சகர், சிற்பாசிரியர் ஒழுக்கம், அடியார் இயல்பு போன்றவை பற்றியும் கூறுகின்றன.

அத்துடன் கொல்லாமை, கள்ளாமை, பிறர் மனை நயவாமை, பொய்யாமை முதலான நல்லொழுக்கங்களை வற்புறுத்துகின்றது, அத்துடன், உயிர்களிடத்தே இரக்கம் கொள்ளல், உயர்வு தாழ்வு கருதாது அடியாரையும், பிறரையும் அன்போடு பேணி உறவாடுதல் போன்ற உயர்குறிக்கோள்களையும் வலியுறுத்துகின்றன. நாம் மேற்கூறிய நல்லொழுக்கங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து உயர்வடைவோம்.

## 🕮 பாடச் சுருக்கம்

- ❖ ஆகமம் சிறப்பு நூல் எனக் கொள்ளப்படும்.
- ❖ சிவாகமங்கள் இருபத்தெட்டாகும்.
- ❖ சிவாகமங்கள் சிவ வழிபாட்டு முறைகளைக் கூறுகின்றன.
- ❖ சிவாகமங்கள் சரியா பாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்காக வகுக்கப்படும்.

## ✍ பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆகமம் சிறப்பு நூல் என அழைக்கப்படுவதன் காரணத்தைக் குறிப்பிடுக?
2. ஆகமம் என்ற சொல்லின் பொருளினைத் தருக?
3. சிவாகமங்கள் சிலவற்றின் பெயரைக் குறிப்பிடுக?
4. சிவாகமங்களில் விளக்கப்படும் நல்லொழுக்கங்களில் சிலவற்றைத் தருக?

## ௐ செயற்பாடு

சிவாகமங்கள் இருபத்தெட்டினையும், அதன் பகுப்பினையும் அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## (இ) புராணங்கள்

வேதங்களில் கூறப்பட்ட கருத்துக்களை விரிவாக விளக்கம் தர எழுந்தவையே புராணங்கள் ஆகும். 'புராணம்' என்பதன் பொருள் பழமை என்பதாகும். இது பழைய வரலாற்றைக் கூறும் நூல் என விரிந்து நிற்கும்.

புராணங்கள் உலகின் தோற்றம் (சர்க்கம்), ஒடுக்கம் (பிரதிசர்க்கம்), மனுவந்தரம், பரம்பரை (வம்சம்), அரசமரபு (வம்சாநுசரிதம்) ஆகிய ஐந்தையும் கூறுவதால் புராணம் பஞ்சலக்கணம் எனப்படும். சிவ புராணங்களைப் படிப்பதால் சிவபக்தி வளரும், சமய உண்மைகள் நன்றாகப் பதிவதன் பொருட்டுக் கதை வடிவில் இவை காணப்படுகின்றன.

புராணங்கள் வடமொழியிலும், தமிழ் மொழியிலும் காணப்படுகின்றன. வடமொழிப் புராணம் பதினெட்டாகும். இவற்றை மகாபுராணங்கள் என அழைப்பர். இவை சிவனுக்குரியவை, விஷ்ணுக்குரியவை, பிரமாவிற்குரியவை, அக்கினிக்குரியவை, சூரியனுக்குரியவை என ஐந்து வகைப்படும். சிவபுராணங்கள் பத்தாகும். அவை சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடியம், மற்சம், மார்க்கண்டேயம், பிரமாண்டம் என்பனவாகும். விஷ்ணு புராணங்கள் நான்காகும். அவை நாரதீயம், பாகவதம், காரூடம், வைணவம் என்பனவாகும். பிரம புராணங்கள் பிரமம், பதுமம் என இரண்டாகும். சூரிய புராணம் ஒன்று இது ஆக்கிநேயமாகும்.

வடமொழிப் புராணங்களான பதினெண் புராணங்களைத் தவிர தமிழ் மொழியிலும் பல புராணங்கள் எழுந்துள்ளன. இவற்றில் இறைவனின் மகிமைகள், அவன் அடியவர்களுக்காகப் புரிந்தருளும் திருவிளையாடல்கள், அவன் எழுந்தருளியுள்ள தலங்களின் மகிமைகள், இறைவனை வழிபட்டவர்கள் அடைந்த மேன்மைகள் என்பனவே தமிழ் புராணங்களில் பெரிதும் விளக்கப்பட்டுள்ளன.

வடமொழிப் புராணங்களைத் தழுவி தமிழில் எழுந்த புராணங்களாகக் கந்தபுராணம், இலிங்கபுராணம் போன்றவை காணப்படுகின்றன. சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியன மெய்யடியார் புராணங்களாகும். திருவிளையாடற் புராணம், திருச் செந்தூர்ப்புராணம் முதலியன தலபுராணங்களாகும். கந்தபுராணம் முருகனின் பெருமையைக் கூறும் நூலாகும். இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள் முதலானவை இலக்கியம், கலை, தத்துவம் முதலான துறைகள் வளர்வதற்குப் பொருள் மரபாக அமைந்துள்ளது. எனவே மாணவர்களாகிய நாம் புராணங்களைக் கற்பதுடன் அவை கூறும் நன்றி மறவாமை, சிவநிந்தை புரிவோருடன் சேராமை, தூய்மையான இறைபக்தி என்பவற்றை எமது வாழ்வில் பேணி உயர்வடைவோம்.

## (ஈ) இதிகாசங்கள்

இந்துமத வரலாற்றிலே இதிகாசங்கள் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. இதிகாசம் என்றால் இதி + இ + ஆச என்று பிரிக்கப்பட்டு, இப்படி முன்பு நடந்தது என்று பொருள்படும். இதனைப் பழைய வரலாற்றைக் கூறும் நூல் எனவும் நோக்கலாம். மகாபாரதம், இராமாயணம் என்பன இதிகாசங்களாகும். சிவரகசியம் என்னும் நூலும் இதிகாச நூல்களுள் அடங்கும்.

இராமாயணத்தை வடமொழியில் வான்மீகியும், தமிழில் கம்பரும் பாடியுள்ளனர். மகாபாரதத்தை வடமொழியில் வேதவியாசரும், தமிழில் வில்லிபுத்தூர் ஆழ்வாரும் இயற்றினர்.

இதிகாசங்கள் தேவர், அசுரர், மக்கள் முதலியோர்களுக்கிடையில் நடந்த நிகழ்ச்சிகள், கதைகள் முதலியவற்றை விளக்குகின்றன. பெரும்பாலும் உபதேச பரம்பரையில் வந்த ஒரு கதையை பிரதானமாகக் கொண்டு பல கிளைக்கதைகளோடு சேர்த்து விரித்துக் கூறுகின்றன. இதிகாசங்கள் மானுட விழுமியங்களை ஒழுங்குபடுத்திக் கூறுவதுடன் வேத மந்திரங்களின் பொருளை நன்கு அறிய உதவும் நூல்களாகவும் உள்ளன.

மகாபாரதம் குருகுலத்தவரின் கதையைச் சொல்லுகின்றது. இராமாயணம் சூரிய வம்சத்தில் தோன்றிய இராமபிரானுடைய கதையைக் கூறுகின்றது. ஆயினும் இவ்விரு நூல்களும் விஷ்ணுவின் அவதாரக் கோட்பாட்டினை முக்கியப்படுத்திக் கூறும் அதே சமயம் சிவவழிபாட்டின் சிறப்பினையும் கூறிச் செல்லும்.

இதிகாசங்கள் பொதுவாக மக்களின் நல்வாழ்க்கைக்கான போதனைகளை வழங்கும் நூல்களாகவும் அமைகின்றன. இன்னகாலத்தில் இன்னது செய்ய வேண்டும் என வழிவகை கூறுவதுடன், நல்லொழுக்கம், பொறுமை, நேர்மை, அஞ்சாமை, தியாகம், சகோதரத்துவம், பிறர் மனை நயவாமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை முதலிய நற்பண்புகள் இந்நூல்களில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. எனவே நாமும் இதிகாச நூல்களைக் கற்று கூறும் நற்பண்புகளைக் கடைப்பிடித்து இறையருள் பெறுவோம்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச் சுருக்கம்

- இதிகாசங்களும், புராணங்களும் கலை வரலாற்றிற்கு பொருள் மரபாய் அமைவன.
- மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம் என்பன இதிகாசங்களாகும்.
- புராணங்கள் வடமொழியிலும், தமிழ்மொழியிலும் காணப்படுகின்றன.
- வடமொழிப் புராணங்கள் பதினெட்டாகும்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இதிகாசங்கள் மூன்றும் எவை?
2. இதிகாசங்களில் குறிப்பிடப்படும் மனித நல்வாழ்வுக்கான போதனைகளுள் சிலவற்றைக் குறிப்பிடுக.
3. புராணம் என்பதன் பொருளைக் குறிப்பிடுக.
4. புராணம் பஞ்சலக்கணம் என அழைக்கப்படுவதன் காரணத்தைக் குறிப்பிடுக.

## ௐ செயற்பாடு

- புராண இதிகாசங்களில் காணப்படும் அறக்கருத்துக்களை தொகுத்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.